## இயல் 7.5 - வடிவியல்

பயிற்சி எண் :: 7.5.1.2.A


வடிவியல் (Geometry) - அடுத்தடுத்த கோணங்கள் - வரையறை

---


## வடிவியல் (Geometry) - அடுத்தடுத்த கோணங்கள் - வரையறை

பொதுவான ஒரு முனையும்[1] பொதுவான ஒரு கதிரும்[2] கொண்டு அதே சமயம் பொதுவான உட்பகுதியைக்கொள்ளாத[3] இரு கோணங்களை **அடுத்தடுத்த கோணங்கள்** அதாவது Adjuscent Angles என்றழைக்கிறோம்.

### அடுத்தடுத்த கோணங்களுக்கு ஓர் உதாரணம்





கோணம் $p^\circ$-யும் கோணம் $q^\circ$-வும் ஒன்றுக்கொன்று உட்பட்டோ அல்லது சார்ந்தோ இல்லாமல் தனித்தனியான கோண உட்பகுதிகளைக் கொண்டுள்ளன.





இரு கோணங்கள் அடுத்தடுத்த கோணங்களாகவும்[1] மற்றும் மிகை நிரப்புக்கோணங்களாகவும்[2] இருந்தால் அவற்றை நாம் **நேரிய கோண இணைகள்** அதாவது Linear pair of angles என்றழைக்கிறோம்.

$$\angle p^\circ + \angle q^\circ = 180^\circ$$


### அடுத்தடுத்த அல்லாத கோணங்களுக்குச் சில உதாரணங்கள்




காண்பிக்கப்பட்டுள்ள இரு கோணங்களுக்கும் பொதுவில் ஓர் கதிர் இல்லை. எனவே இவை அடுத்தடுத்த கோணங்கள் **அல்ல**




காண்பிக்கப்பட்டுள்ள இரு கோணங்களுக்கும் பொதுவில் ஓர் முனை இல்லை. எனவே இவை அடுத்தடுத்த கோணங்கள் **அல்ல**




காண்பிக்கப்பட்டுள்ள இரு கோணங்களின் ஒரு பகுதி ஒன்றன்மேல் ஒன்று அமைந்திருக்கிறது. எனவே இவை அடுத்தடுத்த கோணங்கள் **அல்ல**

## இதன் காணொளியின் YouTube இணையதள இணைப்பு (YouTube URL)

https://youtu.be/0y50L-eMSJ4


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Monday 16th January, 2023 :: 12:02 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.

https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**